# ABANDONED BUILDINGS AND ANTI SOCIAL ACTIVITIES: A SOCIOLOGICAL RESEARCH BASED ON MARUTHAMUNAI CITY

M.S.Mohamed Safreen

*Community Correction Officer, Magistrate's court kalmunai*

breez1988@gmail.com

**Abstract**

There are many factors that cause a person to make mistakes, his environment plays a major role in it. Thus to be observed that the abandoned buildings found in the environment are largely used for anti-social activities. This study examines some of the government, non-government and private buildings built for some purpose in Maruthamunai area and the anti-social activities taking place in them. The study revealed that these buildings are used for various anti-social activities such as drug addiction, prostitution and hiding. This research based on qualitative and quantitative study. In this study both primary data and secondary data are used. Data was collected mainly through observation and unstructured interviews, observing human movement in the identified abandoned buildings in Maruthamunai, interweaving the people of living around the buildings and discussing with the relevant authorized persons. Based on the data 100% of the abandoned buildings found in Maruthamunai are used for Drug use, 33% for prostitution and sex activities, 555 for drugdealing and hiding drugs, 775 for students to use mobile phones and play mobile games, 285 for school students to hide in and 445 for thieves. This study presents suggestions to identify and prevent anti-social activities in abandoned buildings in Maruthamunai area and should be take necessary action through the government agents to use.

**Keywords:** anti-social activities, abandoned buildings and crime.

## 1. ஆய்வுப் பின்னணியும் அறிமுகமும்

இலங்கையிலே அண்மைக்காலமாக சமூக சீர்கேடுகளும் குற்றச்செயல்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன(Transparency International Sri Lanka 2019). அரசாங்கம் அவற்றைத் தடுப்பதற்கான பல நெறிமுறைகளையும் திட்டங்களையும் காலத்துக்குக் காலம் அறிமுகப்படுத்தினாலும் அவை ஏதோ ஒரு வகையில் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கிறது. குற்றச் செயல்கள் எப்போதும் சமூகத்தினால் அங்கீகரிக்கப்படுவதில்லை. குற்றச் செயல்கள் என்பவை சமூக விரோதச் செயல்களின் மறுவடிவமாகும். அதாவது சமூக விரோதச் செயல்களை செய்வர்களே குற்றவாழிகளாக அடையாளப்படுத்தப்படுகின்றனர் Spelman, W. (1993). சமூக நெறிமுறைகள் மற்றும் வரம்புகளுக்கு அப்பாற்பட்ட மற்றும் அவற்றுக்கு முறணான நடத்தைகளையே சமூக விரோத செயல்கள் எனலாம்(Berger 2003) ஆழுமைப் பிறள்வின் ஒரு பிரதிபலனாகவே இந்த சமூக விரோத செயல்கள் பார்க்கப்படுகின்றன.

சமூக விரோத செயல்களுக்கு அடிப்படையாக பல காரணிகள் காணப்பட்டாலும் அவற்றுள் முக்கியமானதாக ஒரு மனிதனின் சுற்றுச் சூழல் கானப்படுகிறது. அதாவது ஒரு மனிதனது நடத்தையினைத் தீர்மானிப்பதில் அவனது சுற்றுச் சூழல் பெரும் பங்காற்றுகிறது. அந்தச் சுற்றுப்புற சூழல் சரியாக அமைந்துவிட்டால் அவன் பிறள்வு நடத்தைகளின் பக்கம் செல்வது தவிர்க்கப்படும்( விமலா கிருஸ்னபிள்ளை 2012). குற்றச்செயல்கள் அதிகம் இடம்பெறுவதற்கு காரணிகளாக அல்லது குற்றச்

செயல் செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குபவையாக கைவிடப்பட்ட கட்டடங்கள் காணப்படுகின்றன Spelman, W. (1993). கைவிடப்பட்ட கட்டடங்கள் என்பவை பொதுவாகவே மக்கள் நடமாட்டம் குறைந்தவையாகவும் மக்கள் அங்கு செல்வதற்கு அஞ்சும் இடங்களாகவும் இருப்பதனால் அதனை சாதகமாகப் பயன்படுத்தி குற்றவாளிகள் அங்கு குற்றச்செயல்களை அரங்கேற்றுகின்றனர் Spelman, W. (1993).

பிரித்தானிய குற்றவியலாளர் மற்றும் தடவியல் உளவியலாளருமான David Farrington(2014) என்பவர் சமூக விரோதச் செயல்கள் என்பது சமூகத்தின் விதிகள் மற்றும் சட்டங்களுக்கு எதிரான தனிநபர் அல்லது குழு செயற்பாடுகளை குறிக்கும் என்றார். மேலும் அவர் சமூக விரோதச் செயல்களுக்கு உதாரணங்களாக திருடுதல், அழிவுபடுத்துதல், பாலியல் முறைகேடு, அதிகபடியான புகைப்பிடித்தல், அதிகபடியான குடிப்பழக்கம், பெற்றோருடன் மோதல் மற்றும் சூதாட்டம் போன்றவற்றை குறிப்பிட்டடார். மேலும் அவர் சமுக விரோதச் செயல்கள் என்பவை அதிவேகத்தன்மை, மனச்சோர்வு, கற்றல் குறைபாடுகள் மற்றும் மனக்கிளர்ச்சிகள் போன்ற பிற நடத்தைசார் பிரச்சினைகளுடன் சம்மந்தப்பட்டது என்கிறார். இதற்குக் காரணிகளாக ஒருவரது மரபியல், நரம்பியல் மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தங்கள் காணப்படுகின்றன எனவும் குறிப்பிடுகிறார்.

அந்தவகையில் ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட மருதமுனைப் பிரதேசமானது இலங்கையின் கிழக்கு மாகாணம் அம்பாரை மாவட்டத்தின் கல்முனைப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு கிராமமாகும். பெரியநீலாவணை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை என அயல் கிராமங்களாலும் ஒருபக்கம் கடலாலும் சூழப்பட்ட இக்கிராமம் கல்வி கற்றவர்களை அதிகம் கொண்ட கிராமம் எனவும் அழைக்கப்படுகிறது(அப்துல் சத்தார் 2015)

இதன் சனத்தொகை 18 678 ஆகும் (Resource Profile 2022). மருதமுனைக் கிராமமானது பல வரலாற்றுப்பின்னணிகளைக் கொண்டதொரு கிராமமாகும். ஆனாலும் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட தலைப்பான கைவிடப்பட்ட கட்டடங்களும் சமூக விரோதச் செயல்களும்: மருதமுனைப்பிரதேசத்தை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு என்ற தலைப்போடு ஒப்பிடுகையில் கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையை வெகுவாகப் பாதித்த சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டு அதிக உயிர் மற்றும் உடமைகளையும் இழந்த ஒரு கிராமமாகும்(ESMO 2005). சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதன் மறு நாள் தொடக்கம் சிறிய சிறிய தற்காலிக சீலைக்கூடாரங்கள் என ஆரம்பித்த இவ்வூருக்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் வீடுகள், குடியிருப்புத் தொடர்மாடிகள், பாடசாலைகள், மற்றும் பொதுக்கட்டடங்கள் என பாரியளவில் வளர்ச்சி கண்டது (ESMO 2005).

அதாவது மக்கள் பாதிக்கப்பட்டு நிர்க்கதியான நிலையில் இருந்தபோது அதிக உதவிகள் வழங்கப்பட்டு பின்னர் பல புதிய புதிய தொண்டு நிறுவனங்களும் வந்து புதிய திட்டங்களை அறிமுகம் செய்தன(ESMO 2005). பின்னர் அரச மற்றும் அரச சாரா தொண்டு நிறுவனங்களினால் பல கட்டடங்களும் கட்டப்பட்டு சில காலங்கள் அவை பாவனையில் இருந்து தற்போது பாவனையற்றுக் கிடக்கின்றன(( சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் 2022). அதனோடு இணைந்ததாக அவ்வப்போது அரசினாலும் அரசியல்வாதிகளாலும் சில சில பொதுக்கட்டடங்களும் அமைக்கப்பட்டு முடிவுறாமலும் பாவனைக்குதவாமலும் உள்ளன. இவ்வாறான கட்டடங்கள் பல அடையாளப்படுத்தப்பட்டு பல நாட்கள் அவதானித்ததன் பின்னர் அந்தக் கட்டடங்களை பயன்படுத்தாமல் இருப்பதனால் அதனுள் பல சமூக விரோதச் செயல்கள் இடம்பெறுவது அவதானிக்கப்பட்டுள்ளது(சமுதாய சீர்திருத்தக் காரியாலய அறிக்கை 2022). எனவே இவ்வாறான கைவிடப்பட்ட கட்டடங்களுக்குள் இடம்பெறுகிற சமூகவிரோதச் செயல்களை அடையாளம் கண்டு அவற்றைத்தடுப்பதற்கான முன்மொழிவுகளை செய்வதோடு அக்கட்டடங்களை எந்தவகையில் பயனுள்ளதாக பயன்படுத்த முடியும் என்பதையும் இவ்வாய்வு ஆராய்கிறது.

**2. ஆய்வுப் பிரச்சினை**

சமூக விரோதச் செயலாளர்களின் இருப்பிடங்களாக கைவிடப்பட்ட கட்டடங்கள் காணப்படுகின்றன Madi Son Lee Moore. (2017). எமது நாட்டிலே இடம்பெறுகிற பாரிய பல குற்றச் செயல்களும் இடம்பெற்றிருக்கின்ற இடங்களாக கைவிடப்பட்ட கட்டிடங்களே காணப்படுகின்றன(பொலிஸ் அறிக்கை 2022) பொதுவாக கைவிடப்பட்ட கட்டடங்கள் மற்றும் சமூக விரோதச் செயல்கள் என்பவற்றை தொடர்பு படுத்தி இயலவே பல ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன( Spelman, 1993 ; Madi Son Lee Moore, 2017 ; Jon Shane, 2012 ; Wallace, Schalliol, 2015). ஆனாலும் கைவிடப்பட்ட கட்டடங்களின் தற்கால போக்கு மற்றும் குறிப்பிட்ட ஆய்வுப் பிரதேசமாக மருதமுனையில் உள்ள கட்டடங்கள் எந்தவகையில் சமூகவிரோதச் செயல்களுக்காக துணை நிற்கின்றன என்பவை ஆய்வு செய்யப்பட வேண்டியவையே. எனவே அந்த ஆய்வு இடைவெளியை மையமாகக் கொண்டு மருதமுனையில் உள்ள கைவிடப்பட்ட கட்டடங்கள் என்னென்ன வகையான சமூக விரோதச் செயல்களுக்காக பயன்படுத்தப் படுகின்றன என்பதனை இவ்வாய்வு விரிவாக ஆராய்கிறது.

**3. ஆய்வு நோக்கம்**

மருதமுனையில் உள்ள கைவிடப்பட்ட கட்டடங்களையும் அதனுள் இடம்பெறுகிற சமூக விரோதச் செயல்களையும் அடையாளம் காணல்.

**4. ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்புசார் ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விலே முதலாம் நிலைத் தரவுகளாக மருதமுனை பிரதேசத்தில் காணப்படுகிற அடையாளம் காணப்பட்ட கைவிடப்பட்ட கட்டடங்களுக்கு அருகில் வசிக்கும் பிரதேச வாசிகளிடம் ஒழுங்கமைக்கப்படாத நேர்காணல்கள்(Unstructured Interviews) மற்றும் எழிய அவதானம் மூலமும் பெறப்பட்டன. அதனோடு இணைந்ததாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிசார் ஆகியோரிடமும் பெறப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்படுள்ளன. இரண்டாம் நிலைத்ததரவான மருதமுனைப்பிரதேசத்தில் உள்ள பாவிக்கப்படாத கட்டடங்கள் தொடர்பான தரவுகள் கல்முனைப் பிரதேச செயலகம், கல்முனை மாநகர சபை, கல்முனைப் பிரதேச செயலக புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர், மருதமுனை கிராம சேவகர்கள் என பலரிடம் இருந்து சேகரிக்கப்பட்டன.

**5. ஆய்வுப் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

செய்யப்பட்ட ஆய்வின் பிரகாரம் பின்வரும் கட்டடங்கள் மருதமுனைப் பிரதேசத்தில் கைவிடப்பட்ட கட்டடங்களாக காணப்படுவதாக அடையாளப்படுத்தப்பட்டது.

| தொ.இல | கட்டடம் | கட்டப்பட்டதன் நோக்கம் |
|---|---|---|
| 01 | 65 மீட்டர் சுனாமி வீட்டுத்திட்டம் (பகிரப்படாத 76 வீடுகள்) | சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடுகளை இளந்த மக்களுக்கு பகிர்ந்தளித்தல். |
| 02 | மருதமுனை கடற்கரைப் பூங்கா ஓய்வு கொட்டகைகள் 03 | சிறுவர் பூங்காவிற்கான ஓய்வுக்காக |
| 03 | பெரியநீலாவணை சலவைத்தொழிலாழர் ஓய்வு மண்டபம் | சலவைத்தொழிலாளர்களின் ஓய்வுக்காக |
| 04 | மருதமுனை திண்மக்கழிவுகள் பிரித்தெடுக்கும் நிலையம் | திண்மக்கழிவுகள் பிரித்தெடுத்தல் |
| 05 | மருதமுனை பொது நூலக புதிய மாடிக் கட்டடம் | வைபவங்கள் மற்றும் திருமணங்களுக்கான மண்டபமாக |

| | | |
|---|---|---|
| 06 | மருதமுனைக் கடற்கரை கோபுரம் (Light House) | கடற்கரை அடையாளச் சின்னம் |
| 07 | Agaas Beach Park பெரியநீலாவணை | கடற்கரை பூங்கா |
| 08 | பெரியநீலாவணை தொழிற்பயிற்சி நிலையம் | தொழிற்பயிற்சி நிலையம் |
| 09 | பெரியநீலாவணை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் | ஆரம்ப சுகாதார பராமரிப்பு (பயன்படுத்தப்படாத தினங்களில்) |

மேற்குறிப்பிடப்பட்ட கட்டடங்கள் கைவிடப்பட்ட கட்டடங்களாக அடையாளப்படுத்தப்பட்டன. இவை அனைத்துமே ஏதோ ஒரு தேவைக்காகக் கட்டப்பட்டு தற்போது பாவனையில்லாமல் கிடக்கின்றன. இவற்றை அதிகம் பாவிப்பவர்களாக சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோர் உள்ளனர். இவர்கள் இக்கட்டடங்களைப் பயன்படுத்தி தமது செயல்களை கட்சிதமாக செய்து முடிக்கின்றனர். இந்த விடயம் பல நாட்களாக அவதானிக்கப்பட்டு மற்றும் அயலவர்களுடன் கலந்துரையாடப்பட்டு அங்கு இடம்பெறுகிற சமூக விரோதச் செயல்களாக பின்வருவன அடையாளப்படுத்தப்பட்டன.

**5.1. போதைப்பொருள் பாவனை**

குறிப்பிடப்பட்ட கைவிடப்பட்ட கட்டடங்கள் அனைத்திலுமே முதன்மையாகவும் அதிகமாகவும் இடம்பெறுகிற சமூக விரோதச் செயலாக போதைப்பாவனை அடையாளம் காணப்பட்டது. 9 கட்டடங்களின் அயலவர்களும் அக்கட்டடடங்களில் போதைப்பொருள் பாவனைகள் இடம்பெறுகின்றன என்பதை குறிப்பிட்டடிருந்தனர். இக்கட்டடங்கள் அனைத்தும் மனித நடமாட்டம் அற்று பாளடைந்து கிடப்பதனால் போதைப்பாவனைக்கு சாதகமாக அவை உள்ளன. அதிலும் குறிப்பாக இரவு வேளைகளில் இருளாக காட்சியளிப்பதனால் போதைப்பாவனையாளர்களுக்கு அது மேலும் வசதியாய் அமைந்து விடுகிறது. சில இடங்கள் சிலரின் சொந்த வீடுபோல் அவர்களது போதைப்பாவனைக்காக பயன்படுத்தப்படுவதாகவும் பிரதேச வாசிகள் குறிப்பிட்டனர். மேலும் பகல் வேளையிவ் அவ்விடங்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டபோது அங்கு பேதைப்பாவனை இடம்பெறுவது மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. அதாவது மதுபானப் போத்தல்கள், கஞ்சா விதைகள், சிகரட் பீடி போன்றவற்றின் துகள்கள், வெற்று ஊசியேற்றும் கருவிகள் மற்றும் இன்னோரன்ன பொருட்கள் அந்த கட்டடங்களில் அதிகம் இருந்தன. அந்தக் கட்டடங்களுக்குள் நுளைகிறபோதே அவை போதைப்பாவனையின் உச்ச பயன்பாட்டில் உள்ளது என்பதனை அறிய முடியும்( சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் 2000) அதை பிரதேச மக்களும் மேலும் உறுதி செய்தனர். அதுமட்டுமல்லாது சில இடங்களில் பொதுமக்கள் இது தொடர்பாக பொலிசாருக்கும் தகவல்கள் வழங்கப்பட்டு அவர்களும் இடையிடையே சுற்றிவளைப்புக்களை நடாத்துவதாக குறிப்பிட்டனர்( மருதமுனை பொலிஸ் 2022)

இப் போதைப் பாவனையானது குறிப்பிட்ட பிரதேசத்திலே வசிக்கின்ற மக்களுக்கும் பாரிய அச்சுறுத்தலாக காணப்படுகிறது. போதைப்பொருள் பாவனையாளர்களால் பிரதேசவாசிகள் யாரும் பகல் வேளைகளில் கூட அக்கட்டடங்கள் அமைந்துள்ள பகுதிக்கு செல்வதில்லை எனக் குறிப்பிடுகின்றனர். அதுமட்டுமல்லாது சிறு பிள்ளைகள் மற்றும் இளைஞர்களை தமது வீடுகளுக்குள் வைத்துள்ள பெற்றோர் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்கவேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

**5.2. விபச்சாரம் மற்றும் பாலியல் செயற்பாடுகள்.**

அடையாளம் காணப்பட்ட கட்டங்களுக்குள் போதைப்பொருள் பாவனையோடு சேர்த்து விபச்சாரம் மற்றும் பாலியல் ரீதியான சில செயற்பாடுகளும் இடம்பெறுவதாக 3 கட்டடங்களை அண்டியுள்ளவர்கள் குறிப்பிட்டனர். குறிப்பாக மருதமுனை சுனாமியால் பாததிக்கப்பட்ட மக்களுக்காக கட்டப்பட்ட வீடுகளில் கையளிக்கப்பட்டு எஞ்சியுள்ள வீடுகள் இப்படிப்பட்ட செயற்பாடுகளுக்கு அதிகம் பயன்னபடுத்தப்படுகிறது. சரியாக 76 வீடுகள் இவ்வாறு பகிர்ந்தளிக்கப்படாமல் உள்ளன. அவை அனைத்துமே பாளடைந்து காடாக

மாறியுள்ளன. மக்கள் எட்டியும் பார்க்காத சூனியப் பிரதேசமாக அது உள்ளது. அந்த வீடுகளுக்குள் இரவு வேளைகளில் முச்சக்கர வண்டிகள் வருவதாகவும் அதிலே இருந்து பெண்களும் இறங்குவதை தாங்கள் அவதானிப்பதாக பிரதேச மக்கள் குறிப்பிட்டனர். அவர்களின் கூற்றையடுத்து நேரடியாக அந்த வீடுகளுக்குள் சென்று பார்த்ததில் அப்படிப்பட்ட செயல்கள் நடக்கலாம் என சந்தேகிக்க் கூடிய அளவிற்று அங்கு ஆணுறைகள் பல காணப்பட்டன. அது மட்டுமல்லாது ஆண் பெண்களின் உள்ளாடைகளும் அங்கு காணப்பட்டன( சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் 2022)

அத்தோடு சில ஒர்பாலினச் சேர்க்கையாளர்களும் தங்களுக்கு சாதகமான இடங்களாக இவற்றை பயன்படுத்துகின்றனர். குறிப்பாக ஆண் ஓர்பாலினச் சேர்க்கையாளர்கள் பலரும் இக்கட்டிடங்களுக்குள் நடமாடுவதனை அவதானிப்பதாகவும் சில சிறுவர் துஸ்பிரயோகங்களை பிரதேசவாசிகள் கையும் மெய்யமாக பிடித்து பொலிசாரிடமும் ஒப்படைத்த சந்தர்ப்பங்களும் உள்ளதாக குறிப்பட்டனர். சில வறிய சிறுவர்கள் பெரிய நபர்களுடன் வந்து போவதையும் இடையிடையே அவதானிக் முடிவதாக பிரதேச வாசிகள் குறிப்பிட்டனர்.

### 5.3. போதைப்பொருள் வியாபாரத்தளம் மற்றும் போதைப்பொருட்களை மறைத்து வைக்கும் இடம்.

முன்னர் போன்று தற்போது போதைப்பொருள் வியாபாரமானது நேரடியாகவோ அல்லது வீடுகளிலோ இடம்பெறுவது கிடையாது. மாறாக தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு உரிய நபர்களை அணுகி அவர்களிடம் ஒரு குறிப்பட்ட இடத்தை கூறி அந்த இடத்தில் போதைப்பொருளை வைக்குமாறு கூறிவிட்டு பின்னர் யாருமில்லாத சந்தர்ப்பதத்தில் குறிப்பிட்ட நபர் வந்து அதை எடுத்துச்செல்வார்( மருதமுனை பொலிஸ் 2022). இவ்வாறு போதைப்பொருட்களை பரிமாறும் மையங்களாக இந்தக் கட்டங்கள் காணப்படுவதாக 5 கட்டங்களை அண்டியவர்கள் குறிப்பிட்டனர். யாரும் சந்தேகம் படாதவாறும் அத்தோடு பொருட்கள் பிடிபட்டாலும் யாருடைய வீடுகளும் தனியாக பிடிபடாத வண்ணம் இந்தக் கட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அதேபோலவே இக்கட்டங்கள் போதை வியாபாரிகள் சிலரின் களஞ்சியமாகவும் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது போதைப்பொருள் வியாபாரிகள் தங்களிடம் உள்ள போதைப்பொருட்களை இலகுவாக பதுக்கி வைப்பதற்கு இவ்விடங்களையே பயன்படுத்துகின்றனர். இக்கட்டங்களுக்குள் அவர்களுக்கு சாதகமான சில இரகசிய இடங்களை உருவாக்கி அதற்குள் அவர்கள் போதைப்பொருட்களை மறைத்து வைக்கின்றனர். இன்னும் தெளிவாக கூறுவதாக இருந்தால் மக்கள் நடமாட்டம் இல்லாத இந்தக் கட்டங்கள் போதைப்பொருட்களை இலகுவாக களஞ்சியப்படுத்த துணை செய்கின்றன. பாவிக்கப்படாத சுனாமி வீட்டுத்திட்டத்தில் உள்ள வீடுகளின் சமையலறையில் உள்ள புகைப்போக்கிகள் சில அவதானிகக்ப்பட்டபோது இதற்கு சாதகமான நிலை அங்கு காணப்பட்டது. மற்றும் இரவு வேளையில் சில குறிப்பிட்ட நபர்கள் தொடர்ச்சியாக அங்கு நடமாடுவதும் அவர்களை சந்திக்க வெளியூர்களிலே இருந்தும் நபர்கள் வந்து கைக்குள்ளே ஏதோ பெற்றுச்செல்வதும் அவதானிக்கப்பட்டது (சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் 2022)

### 5.4. மாணவர் கைபேசிப்பாவனை மற்றும் தொலைபேசி விளையாட்டுக்கள் விளையாடும் இடம்

மேற்படி சில செயற்பாடுகளும் அக்கட்டடங்களிலே இடம்பெறுகின்றது. வீட்டிலே இருந்து தொலைபேசி பாவிக்க முடியாத சில மாணவர்கள் இங்கு வந்து நீண்ட நேரங்கள் தொலைபேசி பேசுதல், தோலைபேசிகளைப் பயன்படுத்தி படங்கள் பார்த்தல், ஆபாச வீடியோக்கள் பார்த்தல், மொபைல் விளையாட்டுக்களை நீண்ட நேரம் விளையாடுதல் என பல விடயங்கள் இடம்பெறுகிள்றன என 7 கட்டடங்களை அண்டியவர்கள் குறிப்பிட்டனர். இதற்கு பெயர்போன இடமாக கல்முனை மாநகர சபையால் அமைக்கப்பட்ட மருதமுனை கடற்கரைப் பூங்காவினைக் குறிப்பிடலாம். இவ்விடம் இரவு வேளைகளில் இருளாக உள்ளது. ஏனைய இடங்களைப்போன்று பெரிதாக சந்தேகம் வராத ஒரு இடமாக இது உள்ளதால் இங்கு சாதாரணமாக பாடசாலை மாணவர்கள் இரவு 7 மணிக்கு பிட்பாடு வந்து அங்குள்ள கொட்டகைகளில் அமர்ந்துகொள்கின்றனர். அனைவரினதும் கைகளிலும் ஒரு நவீன கைதொலைபேசியினை வைத்துக்கொண்டு பிந்திய இரவு வேளைகளிலும் இருக்கின்றனர். இவர்கள்

தொலைபேசிப்பாவனைக்கு அடிமைப்பட்டவர்கள் போண்று அருகில் உள்ளவர்களோடு கூட கதைக்காது தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர்.

அதுமட்டுமல்லாது இது போன்று ஏனைய சில கட்டடங்களும் தொலைபேசிப்பாவனைக்காக பயன்படுத்தப்படுகிறது. பிரதேச வாசிகளின் கருத்துப்படி சில திருமணம் முடித்த நபர்களும் வந்து மிக நீண்ட நேரங்களுக்கு இக்கட்டங்களுக்குள் தொலைபேசியில் பேசிக்கொண்டிருப்பதாகவும் சில வீடியோ அழைப்புக்களிலும் உரையாடுவதை தாம் அவதானிப்பதாகவும் குறிப்பிட்டனர். அதாவது தங்களுடன் நல்ல தொடர்பில் உள்ளவர்களுடன் அவர்கள் ஏன் ஒழிந்து வந்து பேசவேண்டும். இவ்வாறு பேசுவதாக இருந்தால் அது பிழையான தொடர்பாகத்தான் இருக்கும் என அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

### 5.5. பாடசாலை மாணவர்களின் பதுங்குமிடம்

இக்கட்டங்கள் பல பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லாமலும் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்லாமலும் வந்து ஒழிந்திருக்கும் இடங்களாக உள்ளன. அதாவது பாடசாலைக்குச் செல்வதாக பெற்றோரிடம் கூறிவிட்டு பாடசாலைக்குச் செல்லாமலும் மற்றும் பாடசாலைக்குச் சென்று இடையிலும் வெளியேறி இவ்வாறான கட்டடங்களுக்குள் வந்து அமர்ந்து புகைப்பிடித்தல் மற்றும் கைபேசிப்பாவனை என்பவற்றுக்கு அடிமையாகின்றனர் என 8 கட்டடங்களை அண்டியவர்கள் குறிப்பிட்டனர். இந்த விடயமும் பிரதேச மக்களால் அதிகம் அவதானிக்கப்படுகிறது. சில பெற்றுறோர்கள் இவ்விடங்களுக்கு வந்து அவர்களது பிள்ளைகளை அடித்து அழைத்துச் செல்லும் சம்பவங்களும் அவ்வப்போது நடக்கின்றனவாம்.

### 5.6. திருடர்களின் வசிப்பிடம்

இவ்வகையான பாவிக்கப்படாத கட்டடங்கள் கள்வர்களின் தொடர்ச்சியான வசிப்பிடமாகவும் அவர்கள் திருடுகின்ற பொருட்களை மிகப்பாதுகாப்பாக வைக்கின்ற இடமாகவும் இருக்கின்றன. இவ்விடயத்தை 4 கட்டடங்களின் அயலவர்கள் குறிப்பிட்டிருந்தனர். அதாவது ஊருக்குள் சிரிய சிரிய திருட்டுக்களை செய்கின்ற திருடர்கள் அவ்வப்போது சில காலங்களுக்கு இவ்வகையான கட்டடங்களையே தங்களது தங்குமிடங்களாக பயன்படுத்துகின்றனர். இவ்வாறான விடையங்குளுக்காக அதிகம் பயன்படுத்தப்படுபவையாக சுனாமியால் பாதிக்கப்பட்டு அரைவாசி உடைந்த பாளடைந்த வீடுகள் காணப்படுகின்றன. வீட்டின் உரிமையாளர்கள் அவ்வீடுகள் ஆபத்தான அனர்த்தப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டதனால் அவற்றை பராமரிப்பதில்லை. இதனை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட திருடர்கள் அவற்றை தங்களது வீடுகள் போல் பயன்படுத்துகின்றனர்( சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் 2022)

இவ்வாறாக பல சமூக விரோதச் செயல்களுக்கு பயன்படுத்தப்படும் இடங்களாகவும் சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுவோரை பாதுகாக்கும் இடங்களாகவும் இந்த கைவிடப்பட்ட கட்டிடங்கள் காணப்படுகின்றன.

## 6. முடிவுரையும் பரிந்துரைகளும்

ஆய்வின்படி கைவிடப்பட்ட கட்டடங்களாக இனங்காணப்பட்ட கட்டடங்களுக்குள் போதைப்பொருள் பாவனை (100%), விபச்சாரம் மற்றும் பாலியல் செயற்பாடுகள் (33%), போதைப்பொருள் வியாபாரத்தலம் மற்றும் போதைப்பொருட்களை மறைத்து வைத்தல் (55%) , மாணவர் கைபேசிப்பாவனை மற்றும் தொலைபேசி விளையாட்டுக்கள் விளையாடுதல் (77%) , பாடசாலை மாணவர்களின் பதுங்கியிருத்தல்(88%) , திருடர்களின் வசிப்பிடம் (44%) போன்ற பல சமூக விரோதச் செயல்கள் இடம்பெறுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான செயற்பாடுகள் அதிகரித்த வண்ணமே உள்ளனவே தவிற குறைந்தபாடில்லை. இப்டியாக குற்றங்கள் செய்வதற்கு இலகுவான மற்றும் பாதுகாப்பான இடங்கள் காணப்படுகிற போது குற்றச் செயல்களைச் செய்வதற்கான நாட்டம் அதிகரிக்குமே தவிற எக்காரணம் கொண்டும் குறையாது. எனவே இக்கட்டடங்களை அவ்வாறே விட்டுவிடாமல் பின்வரும் சில

ஆலோசனைகளை பின்பற்றுகிறபோது அவற்றை பயனுள்ளதாக பயன்படுத்த முடிவதோடு சமூக விரோதச் செயல்களையும் தடுக்க முடியும்.

- பகிர்ந்தளிக்கப்படாமல் இருக்கின்ற சுனாமியால் பாதிகக்கப்பட்ட மக்களுக்காக கட்டப்பட்ட வீடுகளை ஏதோ இரு வகையில் வீடுகள் இல்லாமல் இருக்கிற மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பொதுவாக எல்லா கட்டடங்களுமே மாநகர சபை எல்லைக்கும் ஆட்சிக்கும் உட்பட்டவை என்பதால் இவ்வாறான கைவிடப்பட்ட கட்டடங்களை மாநகரசபை கண்காணித்தல் அல்லது அவற்றை ஏதோ ஒரு வகையின் மக்கள் பயன்பாட்டிற்குரியதாய் தயார் செய்தல்.
- இரவு வேளைகளில் இருளாகக் காணப்படுகிற இவ்வகையான கட்டடங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களுக்கு மின்விளக்குகளை அதிகம் பொருத்தி வெளிவச்சமான மக்கள் நடமாடும் பிரதேசமாக மாற்றுதல்.
- குறிப்பட்ட கட்டங்களில் சமூக விரோதச் செயல்கள் இடம்பெறுவதனை உன்னிப்பாக அவதானிக்கும் பிரதேச வாசிகளே அவ்விடங்களுக்கு ஆட்கள் வருவதனை தடை செய்வதற்கான திட்டங்களை வகுத்து பாதுகாக்க முடியும்.
- எல்லாவற்றையுமே அரசாங்கம்தான் செய்ய வேண்டும் என்றில்லாமல் இவ்வகையான கட்டடங்களையும் அதன் பராமரிப்பினையும் பொது அமைப்புக்கள் மற்றும் கழகங்கள் அல்லது பள்ளிவாசல நிர்வாககங்கள் போன்றவற்றிடம் ஒப்படைக்கும்போது அவர்களால் சிறப்பாக இவற்றை நிர்வகிக்க முடியும்.
- இடையிடையே பொலிசார் இவ்விடங்களை சோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதன் மூலம் சமூகவிரோதச் செயல்களை செய்ய வருபவர்களுக்கு மத்தியில் ஓர் அச்சத்தை உண்டுபண்ணலாம்.
- கைவிடப்படாமல் புதிதாக அமைக்கப்படுகிற அல்லது மக்களால் பயன்படுத்தப்படுகிற பொது இடங்களை இரவுவேளைகளில் உரிய நேரத்திற்கு மூடிவிடுவதற்கும் கட்டடப்பணிகள் இடம்பெறுகிற இடங்களை யாரும் உட்புகாத வண்ணம் மறைத்தும் விடுவதற்கும் முயற்ச்சித்தல்.
- எந்தவொரு கட்டடமாயினும் அது கட்டப்படுவதற்கு முன்னர் அதற்கான சாத்தியப்பாட்டுக் கற்கையினை ( feasibility study) செய்ததன் பின்னரே கட்டப்பட வேண்டும். அப்போதுதான் குறிப்பிட்ட கட்டடம் எந்தளவுக்கு பயனளிக்கும் என்பது அறியப்படும்.

பொதுவான தேவைகளுக்காக கட்டப்படுகின்ற அனைத்தும் இலவசமாக அமைத்துக் கொடுக்கப்படுவதால் என்னவோ அவை அனைத்துமே அதன் முக்கியத்துவத்தை உணராமல் இவ்வாறான சமூக விரோதச் செயல்களின் புகளிடங்களாக இருக்கின்றன. எனவே இவ்வாறாக பொதுவான தேவைகளுக்காக கட்டப்பட்ட கட்டங்களை வீணாக சீரளிக்கப்படுவதை அனைவரும் பார்த்துக்கொண்டிருக்காமல் ஒரு சமூகப்பொறுப்பெண்று எண்ணி மேற்கூறப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கட்டடங்களையும் பாதுகாப்பதோடு சமூகவிரோதச் செயல்களில் இருந்து சமூகத்தையும் பாதுகாக்க முடியும்.

**உசாத்துணைகள்**

Barkley, R. A., Fischer, M., Smallish, L., & Fletcher, K. (2004). Young adult follow-up of hyperactive children: antisocial activities and drug use. *Journal of child psychology and psychiatry*, 45(2), 195-211.

Brown, A.P. (2004). Anti-social behavior, crime control and social control. The Howard Journal of Criminal Justice, 43(2), 203-211

Costa, A. S., Lami, I.M., Greco, S., Figueira, J.R., & Borbinha, J. (2019). A Multiple criteria approache defending cultural adaptive reuse of abandoned buildings. in Multiple Criteria Decision Making and Aiding (pp.193-220). Springer, Cham

Deery, M., & Jago, L. (2010). Social impacts of events and the role of anti-social behavior. *International Journal of Event and Festival Management*.

Jon Shane. (2012). *The problem of Abandoned Buildings and Lots*. US Department of justice. New York

Madi Son Lee Moore. (2017). The Relationship Between Crime and Vacant Buildings in The City of Chicago, "*undergraduate research scholar's journal"*. Texas

Mallach, A. (2006). *Bringing buildings back: From abandoned properties to community assets: A guidebook for polocymakers and practitioners*. Rutgers University Press.

Mille, A. (2008). Anti-social behavior, behavioral expectations and an urban aesthetic. *The British Journal of Criminology*, 48(3), 379-394

Nefs, M. (2006). Unused urban space: conservation or transformation? Polemics about the future of urban wastelands and abandoned buildings. *City & Time*, 2(1), 47-58

Spelman, W. (1993). Abandoned Buildings: Magnets for crime? "*Journal of Criminal Justice, 21*(5), 481-495

Wallace, D. & Schalliol, D. (2015). Testing the temporal nature of social disorders through abandoned buildings and interstitial spaces. *Social science research* 54, 177-194

மஜீத், ஏ. எச். எம். (2008). *ஆழிப்பேரலை: அறிந்திருக்க வேண்டிய தகவல்கள்*. மருதமுனை வாசகர் வட்டம். மருதமுனை

அப்துல் சத்தார், ஏ. ஆர். (2015). *மான்புறும் மருதமுனை*. சமூக மேம்பாட்டு மையம். மருதமுனை

விமலா கிருஸ்னபிள்ளை. (2012). வழிகாட்டலும் ஆலோசனைகளும். சேமமடு பதிப்பகம். கொழும்பு

எஸ்மோ. (2005). *மருதமுனையில் சுனாமி அனர்த்தம்*, எஸ்மோ நிறுவனம். மருதமுனை.